
ஏகாதசி மகாத்மியம்

(25 ஏகாதசிகள்)

ஆசிரியர்:
ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவ சர்மா



பவானி புக் ஸெண்டர்
19, ஸ்டேஷன் ரோடு சென்னை, 600033.

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பரை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்

காஞ்சீபுரம் - 631 502.

யாத்ராஸ்தானம்: காஞ்சீபுரம்

தேதி 13-11-82

நம் பாரத தேசத்தில் புராண—தர்ம-சாஸ்திரத்துறைகளில் தேர்ச்சி பெற்று உபன்யாஸத்தின் மூலமும், புஸ்தக, பத்ரிகை வெளியீட்டின் மூலமும் ஐம்பது வருஷங்களுக்கு மேல் அயராமல் அத்துறைகளில் ப்ரசாரம் செய்துவந்த வாக்மிபூஷணம் ஸ்ரீ ஸோமதேவ சர்மாவின் புஸ்தகங்கள் இப்போது கிடைப்பது துர்லபமாயிருப்பதை உணர்ந்த அவருடைய ப்ரிய சிஷ்யரான ஸ்ரீ அருணாசல-மய்யர் (மேலாம்பலம் பவானி புஸ்தகாலய உரிமையாளர்) ~~...~~ இப்புஸ்தகங்களை மறுபடியும் அச்சிட்டு வெளியிடுவ-தற்கு முன்வந்திருப்பதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

ஆஸ்திகர்கள் இந்த வெளியீட்டு முயற்சிக்கு உதவி செய்தும், அச்சாகும் புஸ்தகங்களை வாங்கிப் படித்தும், பிறரை வாங்கிப் படிக்கத் தூண்டியும் தார்மிக மனோபாவத்தை ஜனங்களிடையே பரப்புவார்களாக. என்றும், அவரவர்களின் தர்மங்களை அனுஷ்டித்து என்றும் இஹ, பர மேன்மைகளை அடைவார்களாக.

நாராயணஸ்ம்ருதி:

ஏகாதசி மஹாத்மியம்

இருபத்தைந்து ஏகாதசிகளின் மஹிமை

*

ஆசிரியர் :

ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா

*

பவானி புக் சென்டர்

19, ஸ்டேஷன் ரோடு

மேல மாம்பலம், சென்னை-600 033

பதிப்பு, ஜுன்—1983

விலை ரூ. 2-00

ஸ்ரீ சுரபி பிரிண்டர்ஸ்
சென்னை-33

ஸ்ரீ ராமஜயம்
மாங்குயிறி 19௨
ஜித்ரோத்ஸாமி

உ

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

ஏகாதசி மஹாத்மியம்

இருபத்தைந்து ஏகாதசிகளின் மஹிமை

——o——

அவதாரிகை

——o——

ஏகாதசி என்பது ஓர் புண்யகாலம். பரமாத்மாவுக்குப் பரம ப்ரியமான திதி அது, அதைப் போற்றாத புராணமில்லை. அதை ஸ்துதிக்காத தர்ம நூலில்லை. ஆறு வயது முதல் அறுபது வயது வரையிலுள்ளோர் அனைவரும் அதை அவசியம் அநுஷ்டிக்க வேண்டுமென பகவான் ஆணையிட்டார். கங்கையைவிடச் சிறந்த தீர்த்தமில்லை. விஷ்ணுவைவிட உயர்ந்த தேவரில்லை. தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை. காயத்ரியைவிட உயர்ந்த மந்த்ரமில்லை. ஏகாதசியைவிட சிறந்த விரதமில்லை என ஒருமிக்கப் பதினெண் புராணங்களும் அதைப் போற்றுகின்றன. அத்தகைய ஏகாதசி எப்படி உண்டானது? அதை எங்ஙனம் அநுஷ்டிக்க வேண்டும்? ஏகாதசிகள் எத்தனை? அவைகளின் பெயர் என்ன? யார் அதை அனுஷ்டித்தனர்? என்ன பயன் பெற்றனர்? என்று நாம் அறிய வேண்டாமா?

பதினெண் புராணங்களில் பத்மபுராணம் மிகச் சிறந்தது. அதிலும் உத்தரகாண்டம் உத்தமமானதென்பர். ஆங்கு

இது விரிவாகக் காணக் கிடக்கின்றது. ஒரு ஸமயம் உத்தம பக்தரான நாரதரிஷி கைலேயங்கிரி சென்ருர். நந்தியை வணங்கி விடைபெற்ருர். உள்ளே சென்று உமாபதியைத் தரிசித்தார். அவர் தாள்களில் விழுந்து ஸ்துதித்தார். பக்தனை ஆசிர்வதித்து, பகவான் யாதுவரம் வேண்டுமென்ருர். ஏகாதசிகளின் வரலாற்றை விரிவாக உரைத்தருள வேண்டுமென்ருர் நாரதர். கைலாசநாதர் கூறினுர்:— 'அன்ப! இதே விஷயத்தை முன்னெரு சமயம் தர்மராஜன் கண்ணனை வினவினுர். க்ருஷ்ணன் தர்மருக்கு உறைத்த வண்ணம் யான் விளம்புகிறேன் கேள்.'

1. உற்பத்தி ஏகாதசி

க்ருதயுகத்தில் முரன் என்றோர் அரக்கனிருந்தான். அவன் மிகக் கொடியவன். பலசாலி. தேவர்களேயும் அவரைப் போற்றும் அந்தணரையும் வருத்தி வந்தான். இந்திரன் அவனுக்குப் பயந்து ஸ்வர்க்கத்தைவிட்டு ஓடினுன். கைலாயஞ் சென்று சிவனேச் சரணமடைந்தான். அவர் பரிபாலன கர்த்தாவான பரந்தாமனிடம் செல் என்ருர். தேவராஜன் பாற்கடலேயடுத்து பரமாத்மாவை வணங்கித் துதித்தான். அவனது கருத்திற்கிசைந்து கருட த்வஜன் போர்க்கோலங் கொண்டு கிளம்பினுர். அமரரனைவரும் உடன் சென்றனர். முரனும் அரக்கர் படையுடன் போருக்கு வந்தான். சக்ரபாணி சக்ராயுதத்தால் அஸுர ஸேனே அனைத்தையும் அழித்தார். முரன் அதைக் கண்டு வீராவேசங்கொண்டு எழுந்தான். தான் ஒருவனுகவே இருந்து அமரர் படையைப் புறங்காட்டி ஓடும்படி அடித்தான். முரனும் முராரியும் ஆயிரம் ஆண்டு ஸமர் புரிந்தனர். முரனது சக்தியைக்கண்டு விஷ்ணு வியந்தார். தான் களேத்தவர்போல் பயந்து பதரிகாச்ரமம் சென்ருர். ஸிம்ஹாவதீ என்ற குஹையைக் கண்டார். அது பன்னிரண்டு யோஜனே தூரம் விசாலமானது. அதனுள்ளே

சென்று திருமால் பள்ளி கொண்டார். அஸுரனும் அவரைப் பின்தொடர்ந்து சென்றான். உறங்கும் புருஷோத்தமனைக் கொல்லக் கருதி வாளை உருவினான். பரமாத்மாவினது உடலிலிருந்து ஒரு கன்னிகை உதித்தாள். அவள் அழகிற் சிறந்தவள். ஆயுதங்களை ஏந்தி நின்றாள். முரனைப் போருக்கழைத்தாள். அரக்கன் அம்பு எடுக்கு முன்பு அம்பிகை ஓர் ஹுங்காரம் செய்தாள். முரன் ஓர் பிடி சாம்பலாகிக் கீழே விழுந்தான். உடனே பரமனும் நித்திரை விட்டெழுந்தார். தன்னுடலிலிருந்து கிளம்பிய சக்தியைக் கண்டு வியந்தார். அவள் செய்த வேலையைக் கொண்டாடினார். 'ஏகாதசி' என அவளுக்கு நாமம் சூட்டினார். அவள் பிறந்த தினத்திலே உபவாஸமிருந்து தன்னைப் பூஜிப்போருக்கு வைகுண்டமளிப்பதாக வாக்களித்தார். ஏகாதசி அநுஷ்டானம் செய்வோருக்கு இம்மை சுகம், மறுமை சுகம், கீர்த்தி, செல்வம், ஆரோக்யம் முதலியன உண்டாகுமென்றார். அது மார்கழி மாதம் க்ருஷ்ண பக்ஷத்திலுதித்ததால் அதற்கு உற்பத்தி ஏகாதசி என்று பெயருண்டாயிற்று. (அன்று விதிப்படி உபவாஸமிருந்து பரமனைப் பூஜிப்போர் பரமபதமடைவர். இம்மையிலும் கோரிய பயனைப் பெறுவர்.)

2. மோக்ஷ ஏகாதசி

மார்கழி மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசிக்கு மோக்ஷா என்று பெயர். பகவான் மாதங்களில் மார்கழி மாதமாயிருக்கிறார். அதனால் இந்த மாத ஏகாதசி மிகச் சிறந்ததாகும். இதைப் பெரிய ஏகாதசி என்றும் வைகுண்ட ஏகாதசி என்றும் கூறுவார்கள். அச்சமயம் அச்சுதனை அர்ச்சிப்போர் வைகுண்டம் செல்வர். மோக்ஷமடைவர். அவர்களது மூதாதைகளும் முக்தி பெறுவர்.

கம்பமெனும் நகரிலே வைகாநஸன் என்றோர் அரசனிருந்தான். அவன் குடிகளை அன்புடன் பரிபாலித்து

வந்தான். ஓரிரவு மன்னன் ஒரு கனவு கண்டான். அது அவனுக்கு அதிகத் துன்பத்தை அளித்தது. காலையில் எழுந்து காலைக்கடனை முடித்தான். அந்தணோத்தமரை அடுத்து வேண்டினான். பெரியோரே! சென்ற இரவு யான் ஒரு கனவு கண்டேன். எனது மூதாதைகள் நரகத்தே விழுந்து துன்புற்றனர். என்னை நோக்கி! மைந்தா நாங்கள் படும் கஷ்டத்தைக் காணுயோ? இதை அகற்ற ஏதேனும் வழி தேடாயோ? என்று விம்மி விம்மி அழுதனர். இதற்கு யான் என் செய்வது?—என்றான். பூஸுரர்கள், "வேந்தே பர்வதர் என ஓர் முனிபுங்கவர் இருக்கிறார். அவர் எல்லா மறிந்தவர். தங்கள் மூதாதைகள் ஏன் நரகத்தில் இடர்ப்படு கின்றனர்? எங்ஙனம் அவர்களைக் கரை ஏற்றுவதென் பதை அவரே அறிவர். அப்பெரியவரை அடுத்து இதற்கு வழி தேடுவாய்'' என்றனர்.

வைகாநஸன் வனம் சென்றான். பர்வதரைத் தேடி அவர் பாதத்தில் விழுந்தான். கனவைக் கூறி, பெற்றோர் நரகத்தைக் கடக்க யாது உபாயமென்றான்? முக்காலத்தையும் உணர்ந்த முனிபுங்கவர் ஊனக் கண்ணை மூடினார். ஞானக் கண்ணைத் திறந்தார். உண்மையை உணர்ந்து அரசனுக்கு அறிவித்தார். ''மன்ன! மாநிலத்தை ஆண்ட உன் தந்தை மன்னனிற் சிறந்தவன் யான் எனக் கர்வங் கொண்டான். இல்லற தர்மத்திலீடுபட்டவர் ஸத்புத்ரன் உண்டாவதற்காக ருது காலத்தில் (மாதவிடாய் ஆன பதினாறு நாட்களில்) சுப தினத்திலே ஆண் பெண்கள் கூட வேண்டுமென்ற விதியை மறந்தான். தன் மனைவி அதை நினைவூட்டியும் அவளை மதியாது வேறிடம் சென்றான். இந்தப் பாபத்தால் உன் தந்தை நரகயாதனையைப் பெறுகின்றான். நீ உன் மனைவி மக்களுடன் மோக்ஷ ஏகாதசியை விதி வழுவாது அனுஷ்டித்து அதை உனது மூதாதைகளுக்கு அர்ப்பணம் செய்'' என்றார். வைகாநஸன் பித்ருக்களது நன்மையை நாடி மிகப் பக்தி சிரத்தையுடன் விரதத்தைச் செய்தான். அந்த க்ஷணமே அவர்கள் விமானத்தின் மீதேறி மைந்தனை வாழ்த்

தினர். அன்று முதல் வைகாநஸன் மோக்ஷ ஏகாதசியை விடாது அநுஷ்டித்தான். அது சிந்தாமணிக்கு ஈடானது. நினைத்த பொருளை அளிக்க வல்லது. (நமக்கும் முன்னோருக்கும் நற்கதி தரும்.)

3. ஸபலா

தைமாத க்ருஷ்ண ஏகாதசிக்கு ஸபலா என்று பெயர். இந்த ஏகாதசியில் உபவாஸமிருந்து பகவானை பூஜித்து, ஸகல கனிகளையும் நிவேதனம் செய்ய வேண்டும். அன்று தீபதானம் செய்வது சிறந்த தர்மம். இரவெல்லாம் பகவானது சரிதத்தைக் கேட்டுக் கண் விழிக்க வேண்டும். ஒருவகைப்பட்ட மனதுடன் பகவானை த்யானம் செய்தல் நலம்.

சம்பாவதீ நகரிலே மாஹிஷ்மதன் என்று ஒரு மன்னனிருந்தான். அவனுக்கு ஐந்து குமாரர்கள் பிறந்தனர். மூத்தவன் பெயர் லும்பகன். அவன் மிக பாபி. மதுபானத்திற்கும் பிறர் மனைவிக்கும் தன் தந்தை பொருளைச் செலவு செய்தான். அவன் தேவநிந்தை, பக்தநிந்தை செய்யாத தினமில்லை. இதைக் கண்டு அவன் தந்தை சிந்தை நொந்தார். அப்புதல்வனைக் காட்டிற் கொண்டு விடும்படி கூறினார். லும்பகனைக் காவலாளிகள் கண்ணுக் கெட்டாத கானகத்தில் விட்டுத் திரும்பினர். அவன் அரண்யத்திலிருந்து கொண்டே அருகிலுள்ள நகரத்தில் திருடி வந்தான். ஓரிரவு காவலாளிகள் அவனைப் பிடித்து நையப் புடைத்தனர். நான் மாஹிஷ்மதராஜனது குமாரன் என அவன் கூறினான். அதைக்கேட்ட காவலாளிகள் அவனிடம் கருணைக் கொண்டு விட்டு விட்டனர். அன்று பட்ட அடி, அவன் திருட்டை விடும்படி செய்தது. லும்பகன் ஒரு மரத்தடியே தங்கி கந்த மூலங்களை உண்டு வாழ்ந்தான். ஒரு ஸமயம் குளிரால் மெலிந்து உணவுமின்றி ஒரு மரத்தடியே தங்கினான். வெய்யில் ஏற ஏற குளிரகன்றது. கனிகளைக் கொண்டுவர வெளியிற் சென்

ருன். கனிகள் கிடைக்காததால் அலேந்து திரிந்தான். கிடைத்ததைக் கொண்டு வருவதற்குள் பொழுது சாய்ந்தது. தனது மரத்தடியே வந்து சேர்ந்தான். குளிராலும் பசியாலும் வாடி மெலிந்து உறக்கமுமின்றிப் படுத்திருந்தான். கிடைத்த கனியைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்தான். பொழுது விடிந்தது. ஆகாயத்தில் ஓர் குரல் கேட்டது. லும்பக! நேற்று ஸபலா ஏகாதசி. நீ தங்கி நின்றது அரச மரம். இரவிலுமுறங்காது கனிகளே மாதவனுக்களித்தாய். ஆதலின் உன் பாபம் அகன்றது. 'விரைவில் ராஜ்யத்தை அடைவாய்' என்றது. உடனே அருகில் பட்டத்து யானேயுடன் தன் தந்தையின் அமைச்சர்கள் நிற்கக் கண்டான். அவர்கள் லும்பகனே அழைத்துப் பட்டாபிஷேகம் செய்வித்தனர். லும்பகன் நீதி தவருது ராஜ்யபாரம் செய்தான். அவனுக்கோர் புதல்வன் பிறந்தான். அவனிடம் ராஜ்யத்தை அளித்து லும்பகன் விஷ்ணு பக்தியிலீடுபட்டு வைகுண்டஞ் சென்ருன். [பாபத்தை அகற்றுமிது.]

4. புத்ரதா

தைமாத சுக்ல ஏகாதசி புத்ரதா எனப்படும். பத்ராவதி பட்டணத்தை ஸுகேதுமான் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனது மனேவியின் பெயர் சம்பகா. இருவருமாக இல்லற தர்மத்தை இடைவிடாது அநுஷ்டித்து வந்தனர். அவர்கள் எல்லாச் செல்வங்களேயும் பெற்றிருந்தும் புத்ர பாக்யமின்றி வருந்தினர். புதல்வனற்றவருக்கு நற்கதி கிடையாது. அவரளிக்கும் ச்ராத்தத்தைப் பித்ருக்கள் மிக்க துன்பத்துடனே ஏற்கின்றனர் என்று அரசன் மனம் நொந்தான். முற்பிறவியில் செய்த தீவினேயோ இது என்று அதையகற்றக் கருமங்களேச் செய்தான். அப்போதும் மகட்பேறு பெற்ருனில்லே வெறிபிடித்தவன்போல் பரிமீதேறி வனம் சென்ருன். எங்கு செல்கிறேம்,எதற்காகச் செல்கிறேமென்று அவன் அறியவில்லே. அழகிய ஓர்

ஸரஸ்ஸைக் கண்டான். அங்கு சென்றவுடன் அவனுக்குச் சில சுப ஸூசகங்கள் உண்டாயின. அதைக் கண்டு நமக்கும் நற்கதி கிடைக்குமோ என வியந்தான். ஸரஸ்ஸின் அருகே சில ஆச்ரமங்களைக் கண்டான். அங்கு சென்று ஸூர்யனைப் போல விளங்கும் ரிஷிகளைத் தர்சித்தான். தாங்கள் யார்? எங்கு வந்தீர்கள்? என வேந்தன் வினவினான்.

அவர்கள், "நாங்கள் விச்வே தேவர்கள். மாகமாஸம் அருகில் இருப்பதால் இங்கு புனலாட வந்தோம். இன்று புத்ரதா ஏகாதசி. இன்று உபவாசமிருந்து பரமனைப் பூஜிப்போர் புத்ரனைப் பெறுவர்" என்று உரைத்தனர். இதைக் கேட்ட அரசன் மிக ஸந்தோஷமடைந்தான். அவர்களுடன் அந்த ஸரஸ்ஸில் நீராடினான். உபவாஸமிருந்து புருஷோத்தமனைப் பூஜித்தான். உடனே மன்னன் மனைவி கரு தரித்தாள். பத்தாம் மாதத்திலே ஓர் உத்தம புதல்வன் பிறந்தான். அரசன் அளவிலா மகிழ்ச்சி கொண்டான். தன் நாட்டிலுள்ளோருக்கு இந்த ஏகாதசியை அநுஷ்டிக்கும்படி கட்டளையிட்டான். [புத்ர பாக்யத்தை அளிக்குமிது]

5. ஷட்திலா

மாசி மாதம் க்ருஷ்ண ஏகாதசிக்கு ஷட்திலா என்று பெயர். தால்பயர் என்ற முனி, புலஸ்தியரைத் தர்சித்து பிரும்மஹத்தி, கோஹத்தி, பிறர்பொருளை அபகரித்தல் முதலிய பாபங்கள் எதனுல் அகலும் என்று வினவினர். புலஸ்தியர் அதற்கு விடையளித்தார்:- "மாக மாஸ ஆரம்பத்தில், பசுவின் சாணம் பூமியில் விழுவதற்குள் கையிலேந்தி அதில் எள்ளையும் பருத்திக் கொட்டையையும் சேர்த்து ஓர் சுத்தமான இடத்தில் வைக்க வேண்டும். பௌர்ணமிவரை அது ஈரமாக இருந்தால் நம் பாபம் அகலும். பூஜை ஆரம்பிக்க வேண்டும். நூறு கூஷ்மாண்டம் அல்லது தேங்காய்

அல்லது கொய்யாப்பழம் அல்லது கொட்டைப் பாக்கைக் கொண்டு பகவானை அர்சித்து அர்க்யமளிக்க வேண்டும். ஒரு பிராம்மணனை விஷ்ணுவாக வரித்து ஜலபாத்ரம், பாதுகை, குடை, கரும்பு, எள்ளுடன்-பாத்திரம், கறுப்புப்பசு இவைகளைத் தானம் செய்ய வேண்டும். திலத்தை அறைத்து உடலில் பூசிக் கொண்டு திலஸ்நானம், திலதானம், திலஹோமம், திலஜலதானம், திலான்ன போஜனம் என்று ஆறுவகையாக திலத்தை உபயோகிப்பதால் ஷட்திலா என்று அதற்குப் பெயர் வந்தது.

அவனியில் ஓர் அந்தண மாது ஸகல தர்மங்களையும் செய்து வந்தாள். ஆனால் அன்னதானம் மட்டும் அவள் செய்ததில்லை. அவளுக்கு அன்ன தானம் செய்யும்படி அருள்புரிய பகவானே ஸன்யாஸி வேடம்பூண்டு வந்தார். அவள் அர்க்கியம், பாத்யம் முதலியவைகளை அளித்து உபசரித்தாள். பிக்ஷை இடு என்று அவர் பாத்ரத்தை நீட்டினர். அவளுக்குக் கோபம் பிறந்தது. மண்கட்டியை எடுத்துப் பாத்ரத்தில் போட்டாள். உடனே பகவான் மறைந்தார். சில காலம் சென்றபின் அவள் விரதம், தானம் முதலிய தர்மங்களால் சரீரத்துடன் ஸ்வர்க்கம் சென்றாள். அவளுக்கு அங்கு அழகியதோர் அரண்மனை தந்தனர். அதை அவள் சுற்றிப் பார்த்தாள். பற்பல தாஸர்கள் பணி செய்யக் காததிருந்தனர். எல்லாச் சிறப்புமிருக்கக் கண்டாள். பசிக்குப் புசிக்க அங்கு உணவில்லை. பசி அவளை வாட்டியது. பிக்ஷை இடாது மண்கட்டியை எறிந்த பிக்ஷுகன் அங்கு அவள் எதிரில் தோன்றினர். அவள், எனது தவத்திற் கேற்றபடி இங்கு ஸுகமில்லை. பசியால் வாடுகிறேன். இதற்கென்ன காரணம் என்று அவரை வினவினாள். நீ அன்ன தானம் செய்யாததால் ஸ்வர்க்கம் வந்தும் உன்னைப் பசி வாட்டுகிறது. உன்னைத் தர்சிக்கப் பல தேவப் பெண்கள் வருவர். நீ உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொள். ஷட்திலா ஏகாதசியின் புண்யத்தை அளித்தால் கதவைத் திற! என்று கூறி மறைந்தார். அங்ஙனமே தேவபத்தினிகள்

வந்தனர். அவள் பிக்ஷுகர் சொன்னபடி ஷட்திலா புண்யத்தைக் கேட்டாள். பலரும் அதை அளிக்க விரும்பாது சென்றனர். ஒருத்தி மட்டிலும் அளித்தாள். அதனுல் அந்த வீடு உணவுப் பொருள்களால் நிறைந்தது. ஷட்திலா விரதத்தால் பிராம்மணியின் பசி அகன்றது. அவள் சுகமெய்தினுள். [அன்னமளிப்பதிது.]

6. ஜயா

மாக சுக்ல ஏகாதசி ஜயா எனப்படும். இது பிசாச ஜன்மாவை மாற்றவல்லது. மால்யவான் என்று ஒரு கந்தர்வனிருந்தான். அவன் அழகிற் சிறந்தவன். கான கலேயில் கரைகண்டவன். அவன் புஷ்பவந்தி என்ற கந்தர்வ கன்னிகையை மணந்தான். அவள் ரதியைவிட அழகுடையவள். இனிய குரலுடையவள். இவர்கள் இந்த்ரனது பணியாளர்கள். அங்கு ஆடிப்பாடி ஸபையைக் களிக்கும்படி செய்வது இவர்கள் வேலே. ஒரு சமயம் இவர்கள் தங்கள் பணியைச் செய்தனர். ஒருவர் மேல் ஒருவர் அளவில்லா மோகம் கொண்டனர். ஆதலால் பாட்டை மறந்தனர். அபஸ்வரமாகப் பாடினர். இதைக் கேட்ட இந்திரன் சினங்கொண்டான். இருவரையும் பேயாகிப் பாரினில் திரியும்படி சபித்தான். அங்ஙனமே அவர்கள் பல்லாண்டு பூமியில் வந்து பல துன்பங்களே அனுபவித்தனர். ஒருநாள் இருவரும் தற்செயலாக ஒரு மரத்தடியே தங்கள் விதியை நிலேத்து உணவின்றி வருந்தினர். பசியாலும் துன்பத்தாலும் அன்றிரவு ஒருவரும் உறங்கவில்லே. இவர்கள் தங்கிய மரம் அச்வத்த விருக்ஷம். உபவாஸமிருந்த தினம் ஜயா ஏகாதசி. ஆதலால் அவர்களது பேய் ஜன்மமகன்று ஸ்வர்க்கம் சென்றனர். [பேய்க்கும் நற்கதி தருமிது.]

7. விஜயா

பங்குனி க்ருஷ்ண ஏகாதசி விஜயா எனப்படும். இது ஜயத்தை அளிக்கவல்லது. அவரவர் கோரும் விருப்பைப் பூர்த்தி செய்யும். அன்று ஏழு தான்யங்களை ஒன்றன்மேல் ஒன்றுகப் பரப்பி அதன் மேல் கலசத்தை வைத்து ஸ்ரீ நாராயண மூர்த்தியின் பிம்பத்தை அமைக்க வேண்டும். விதிப்படி பூஜை செய்து துவாதசியன்று ஓர் ஸாதுவுக்கு அன்னமளிக்க வேண்டும். அக்கலசத்தை அவருக்களித்துப் பாரணை செய்ய வேண்டும். தந்தை சொற்படி ஸ்ரீராகவன் வனம் சென்றுனல்லவா? ராவணன் சீதாப் பிராட்டியைத் தூக்கிச் சென்றுன். அவளை வீரனுன ஹனுமான் லங்கையில் தர்சித்தான். ராமச்சந்த்ரனிடம் அதை அறிவித்தான். அவர் எங்ஙனம் கடலைக் கடப்பது? அஸுரனை எப்படி வெல்வது?—என்று சிந்தித்தார். பகதால்ப்யர் எனும் முனிவரைச் சரணமடைந்தார். இதற்கு ஓர் உபாயங் கூறும்படி வேண்டினர். அவர் விஜயா ஏகாதசியை விதியுடன் உபதேசித்தார். அந்தப் புண்யத்தால் கடலைக் கடந்தார். பகைவனை வென்றுர். ஜயத்துடன் அயோத்யைக்கு வந்து பட்டம் சூட்டிக் கொண்டார். [துன்பக்கடலைக் கடக்குமிது.]

8. ஆமலகி

பங்குனி சுக்ல ஏகாதசிக்கு ஆமலகீ என்று பெயர். அன்று சுத்தோபவாஸமாயிருத்தல் வேண்டும். அன்று பாபிகளுடன் பேசலாகாது. நெல்லி மரத்தருகே சுத்தம் செய்து கலசத்தை வைக்கவேண்டும். அதன்மீது பரசுராமரது பிம்பத்தை வைத்து விதிப்படி பூஜிக்க வேண்டும். பின்னர் நெல்லிமரத்தைப் பிரதக்ஷிணம் செய்து பூஜையைப் பூர்த்தி செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்தோர் எல்லாப் புண்ய நதிகளிலும் புனலாடிய பயனைப் பெறுவர். நெல்லி மரத்தின்கீழ் கண் விழிப்போர் ஆயிரம் கோதானம் செய்த பயனைப் பெறுவர்.

முன் ஒரு ஸமயம் உலகெல்லாம் பரமனிடம் ஒடுங்கிய பிறகு எங்கும் ஒரே ஜலமயமாகக் காணப்பட்டது. அச் சமயம் பரமாத்மாவினுடைய முகத்திலிருந்து ஒரு ஜலபிந்து பூமியில் விழுந்தது. அது நெல்லி மரமாக விளங்க, இது யாதென அறியாது தேவர் விழித்தனர். அச்சமயம் ஆகாயத்திலிருந்து அசரீரியான வாக்கு ஒன்று தோன்றியது. இது பரமாத்மாவின் அருளால் தோன்றிய மரம். அச்சுத னது அம்சம் நிறைந்த விருக்ஷம். இதை நினைப்போர் கோதான பயனைப் பெறுவர். அதைத் தொட்டால் இரு மடங்கு பலன். அதன் கனியைப் புஜிப்போர் மும்மடங்கு பயனைப் பெறுவர். அதனடியில் ஹரியும், இடையில் ஹரனும், நுனியில் ப்ரம்மனும் வஸிக்கின்றனர். கிளைகளில் முனிவரும், இலையில் வஸுக்களும், புஷ்பங்களில் மருத்துக் களும், பழத்தில் பிரஜாபதிகளும் வஸிக்கின்றனர். இங்ங னம் கூறிய அசரீரியான தேவர் யார்? என முனிவர் வினவி னர். 'உலகிற்குக் காரணம் யாரோ? உகலமாய்த் தோன்றி நின்றவன் யாரோ? அவரே யான்' என அசரீரி கூறிற்று. அங்ஙனமுறைத்தவன் எல்லாம் வல்ல இறைவனே என்று உணர்ந்து அனைவரும் வணங்கினர். [கோதான பலனைத் தருமிது.]

9. பாபமோசனிகா

சைத்ர கிருஷ்ண ஏகாதசி பாபமோசனிகா என்றழைக் கப்படும். மாந்தாதா என்ற அரசன் லோமேசரை வணங்கி இதன் பெருமையைப் பகரும்படி வினவினான். முன் ஒரு ஸமயம் சைத்ரரதம் எனும் அழகிய வனத்தில் மஹரிஷிகள் தவம் செய்தனர். ஆங்கு மஞ்சுகோஷை எனும் அப்ஸரஸ் ஸ்திரீ வந்தாள். முனிவரது மத்தியில் மன்மதனை போல் விளங்கும் மேதாவி என்ற மஹரிஷியைக் கண்டாள். இனிய குரலால் முனிவரை மயக்கி அவருடன் காம ஸுகத்தை அனுபவித்தாள். பலநாள் சென்றபின்

விடையளிக்கும்படி மஞ்சு கோஷை வேண்டினுள். முனிவர், சற்று பொறுத்திரு; போகலாம் என்ருர். அவளுடன் கூடிப் பல்லாண்டு சென்றதையும் முனிவர் அறியவில்லை. மறுபடியும் மஞ்சுகோஷை விடையளிக்க வேண்டினுள். மஹரிஷி, 'நீ வந்து சில நிமிஷங்களே ஆயின. இன்னும் சற்று நேரம் பொறுத்திரு, போகலாம்' என்ருர். இங்ஙனம் பல்லாண்டுகள் கழிந்தன. மேதாவி விழித்து எழுந்தார். பல காலம் பாழானதை அறிந்தார். சிந்தை நொந்து அவள்பால் சினங்கொண்டார். அவளைப் பேயாகும்படி சபித்தார். அவள் அவரடி பணிந்து சாபத்தை அகற்றும்படி வேண்டினுள். மேதாவியும் தன் குற்றத்தை உணர்ந்து அவளை மன்னித்தார். பாபமோசனி என்ற ஏகாதசியின் விரதத்தால் உன் பாபமகலும் என்ருர். அவரும் தன் தந்தையான ச்யவனரிடம் சென்று நடந்ததைக் கூறினுர். அவரும் இந்த ஏகாதசியைக் கொண்டே மேதாவி இழந்த தவத்தைத் திரும்பப் பெறும்படி கூறினுர். மேதாவியும் மஞ்சுகோஷையும் விதிவழுவாது பாமமோசனியை அனுஷ்டித்துத் தத்தம் இஷ்டத்தைப் பெற்றனர். [இதைக் கேட்போர் படிப்போர் பாபமும் போகும்.]

10. காமதா

சைத்ர சுக்ல ஏகாதசி காமதா என்றழைக்கப்படும். அதன் பெருமையைக் கூறும்படி திலீபன் வஸிஷ்டரை வேண்டினுன். அவர் தனது சிஷ்யனுக்குரைத்தார். நாகலோகத்தில் புண்டரீகன் என்ருேர் நாகராஜனிருந்தான். அவன் மிக்க புண்யசாலி. அவனது சபையில் கந்தர்வர் வந்து கானம் செய்வது வழக்கம். லலிதன் என்ற கந்தர்வன் லலிதா என்னும் கந்தர்வ கன்னிகையை மணந்தான். இருவரும் ரூப லாவண்யமுள்ளவர். அந்யோந்யம், அதிக அன்பு பூண்டவர். ஒரு க்ஷணமேனும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியார். புண்டரீகனது ஸபையிலே லலிதன்

தனியாகப் பாட நேர்ந்தது. லலிதையையே மனதில் எண்ணிக் கொண்டு பாடினன். பாட்டிலே பல தவறுதல்கள் நேர்ந்தன. இதைப் புண்டரீகன் அறிந்து சினங்கொண்டான். லலிதனை ராக்ஷஸனுகும்படி சபித்தான். இதை உணர்ந்த லலிதை தன் கணவன் கதியை நினைத்துக் கதறி அழுதாள். அவன் பின் சென்று திரிந்தாள். தற்செயலாக ஒரு முனிவரது ஆச்ரமத்தைக் கண்டாள். மஹரிஷியைப் பணிந்து தன் மணாளன் சாபம் நீங்க வழி கேட்டாள். அவர் பக்தரது இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் காமதா ஏகாதசியை உபதேசித்தார். அதை அவள் அனுஷ்டித்துத் தன் கணவனது சாபத்தை அகற்றினள். எந்த ஆசை கொண்டு இவ்வேகாதசியை அனுஷ்டித்தாலும் அவ்வாசை பூர்த்தியாவது திண்ணம். [காமத்தைத் தருமிது.]

11. வரூதிநீ

வைசாக கிருஷ்ண ஏகாதசியை வரூதிநீ என்றழைபபார்கள். இது ஸகல பாபங்களையும் அகற்றி ஸௌபாக்யத்தை அளிக்கும். பிறவிக் கடலைக் கடக்க இதைத் தோணி எனலாம். மாந்தாதாவும் துந்துமாரனும் இதைக் கொண்டு வானுலகேகி மேன்மை பெற்றனர். பிரும்மனது ஐந்தாம் தலையை அறுத்த சிவன் வரூதிநீயால் அப்பாபத்தை அகற்றினர். தானங்களில் சிறந்தது அன்னதானம். அதைவிட மிகச் சிறந்தது வித்யாதானம். வரூதிநீ விரதம் வித்யாதான பலனை அளிக்கவல்லது. அன்று செய்யும் சிறிய தானமும் ஆயிரம் மடங்கு பயனை அளிக்கும். எந்த ஏகாதசியிலும் உணவு, தாம்பூலம், சந்தனம், புஷ்பம், நித்ரை, எண்ணெய், தேஹப் பயிற்சி முதலியவைகளைச் செய்யலாகாது. [ஸேனை போல் நம்மைக் காக்குமிது.]

12. மோஹினீ

முன்பு ஒரு ஸமயம் ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி தன் குலகுருவான வஸிஷ்டரை நோக்கி, ஸத்குரோ! ஸகல பாபங்களேயும் அகற்றவல்லதான உத்தம விரதத்தைக் கூறுங்கள் என்ருர். வஸிஷ்டர் கூறினர். ராம! வைசாக சுக்ல ஏகாதசி மோஹினீ எனப்படும். அதைப்போன்ற உத்தம விரதம் உலகிலில்லே. மோஹத்தையகற்றுவது மோஹினீ என்ற ஏகாதசி. ஸரஸ்வதி நதிக்கரையில் பத்ராவதி என்ருேர் பட்டணமுண்டு. அதைச் சந்திர வம்சத்திலுதித்த த்ருதிமான் என்ற அரசன் ஆண்டு வந்தான். அந்நகரிலே தனபாலன் என்ருேர் வைச்யன் இருந்தான். அவன் மிக்க விஷ்ணு பக்தன். அவனுக்கு ஸுமநஸ், த்யுதிமான், மேதாவி, ஸுக்ருதன், த்ருஷ்ட புத்தி என ஐந்து புதல்வர் பிறந்தனர். த்ருஷ்ட புத்தி துஷ்ட புத்தி கொண்டவன்; குடிப்பான்; பிறர் மனேவியைப் பெண்டாளுவான்; தேவநிந்தை செய்வான்; பெரியோரைப் பழிப்பான். இவனது துராசாரத்தைக் கண்டு இவன் தந்தை மனம் நொந்தார். இவனே வீட்டை விட்டு விலக்கிவிட்டார். களவாடி காம சுகத்தைப் பெறக் கருதினன். காவலாளிகள் கையில் சிக்கினன். பல சிக்ஷைகளேப் பெற்ருன். நோய்வாய்ப்பட்டு சொல்லொணுத் துன்ப மெய்தினன். முற்பிறவியின் புண்யத்தால் கௌண்டின்ய முனிவரது ஆச்ரமத்திற்கு வந்தான். அவர் கங்கையில் புனலாடிக் கரை ஏறினர். அவர் உடலிலிருந்து ஓர் கங்கைத் துளி அவன் மேல் விழுந்தது. உடனே அவன் தனது பாபத்தை நினேத்து வருந்தினன். முனிவரைச் சரண மடைந்து நற்கதி பெற வழி வினவினன். மோஹினியை அவர் கூற, அதை அனுஷ்டித்து த்ருஷ்ட புத்தி வைகுண்டம் சென்ருன். [மோஹம் அகலும்.]

13. அபரா

ஆனி க்ருஷ்ண ஏகாதசி அபரா எனப்படும். அன்று பகவானை த்ரிவிக்ரமராகப் பூஜிக்க வேண்டும். ப்ரும்மஹத்தி, பொய்சாக்ஷி கூறல், குருநிந்தை முதலிய பாபங்கள் அபரையால் அகலும். அன்றியும் ப்ரயாகையில் மாகஸ்நானம் செய்தல், காசியில் சிவராத்ரி விரதமிருந்து பூஜித்தல், கயையில் பிண்டமளித்தல், ஸ்ரீ கேதாரேசுவர தர்சனம் பதரீகாச்ரமயாத்ரை முதலியவைகளால் எந்தப் புண்யம் கிட்டுமோ அதை அபரை அளிக்கும்.

14. நிர்ஜலா

ஆனி சுக்ல ஏகாதசியை நிர்ஜலா என்று அழைப்பர். ஒரு ஸமயம் தர்மராஜன் வேதவ்யாஸரை வணங்கி கலியனுலுண்டாகும் துன்பத்தை அகற்ற மிகவும் சுலபமான உபாயத்தைக் கூறும்படி வேண்டினர். ஏகாதசி உபவாஸத்தைத் தவிர வேறு சுலபமான மார்க்கமில்லை. இதே ஸகல சாஸ்த்ரங்களிலும் கூறப்படும் தத்துவம் என்று வியாஸர் உரைத்தார். இதைக் கேட்டிருந்த பீமன், முனிச்ரேஷ்டரே! என்னுடன் பிறந்தாரும் தாயும் மனைவியும் அந்த வ்ரதம் அநுஷ்டிக்கின்றனர். என்னையும் உபவாஸமிருக்கும்படி கூறுகின்றனர். ஒருவேளை மாத்திரம் புஜித்து மற்றோர் வேளை உபாவஸம் இருப்பதே என்னுல் ஆகாத காரியம்! நான் எங்ஙனம் உபவாஸமிருப்பது? என் வயிற்றில் விருகமென்றோர் அக்னியுளது. அளவற்ற அன்னமளித்தாலன்றி அது அடங்குவதில்லை. ஆண்டுக்கோர் முறை ஒரே தினம் யான் உபவாஸமிருக்க முடியும். அதனுல் ஸகல ஏகாதசிகளது பயனையும் யான் பெற வேண்டும். அத்தகைய ஏகாதசியைக் கூறுமென்றான். வியாஸரும் தனக்குக் கிருஷ்ணன் சொன்னபடி நிர்ஜலா ஏகாதசியன்று ஜலமுமருந்தாது இருத்தல் வேண்டு

மென்முர். அங்ஙனமே பீமன் உபவாஸமிருந்து த்வாதசி யன்று புஜித்தான். ஆதலால் அன்றுமுதல் பாண்டவ த்வாதசி என்றும் காரணப்பெயர் வழங்கியது. பீம ஏகாதசி என்றும் பெயர். [துன்பத்தை அகற்றுமிது.]

15. யோகிநீ

ஆடி கிருஷ்ண ஏகாதசியை யோகிநீ என்றழைப்பார்கள். அளகாபுரியில் குபேரனுக்கு ஒரு பணியாளனிருந்தான். அவன் பெயர் ஹேமமாலி. அவன் குபேரனது சிவ பூஜைக்குப் புஷ்பம் கொண்டு கொடுக்கும் வேலை செய்பவன். அவன் மனைவி விசாலாக்ஷி என்பவள். மிக அழகுள்ளவள். அவளிடத்தில் ஹேமமாலிக்கு அதிக அன்புண்டு. ஆதலால், அவன் ஒருநாள் மலர் கொண்டுவராமல் மனைவியுடன் ஸந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தான். பூஜையில் உட்கார்ந்த யக்ஷராஜன், புஷ்பம் வராததைக் கண்டு சினங் கொண்டான். இந்தக் குற்றம் செய்த ஹேமமாலியைப் பதினெட்டு வகையான குஷ்டரோகத்தால் கஷ்டப்படும்படி சபித்தான். ஆயினும் ஹேமமாலி சிவபூஜைக்கு ஸகாயம் செய்த புண்யத்தால் அந்நோயுடனிருந்தாலும் பூர்வஜன்ம நினைவு அவனை விட்டகலவில்லை. ஆதலால் தன் விதியை நினைத்து வருந்தினன். மேருமலையில் தவம்புரியும் மார்க்கண்டேயரைச் சரணமடைந்தான். இந்நோயகல வழி கேட்டான். அவா யோகினியை உபதேசித்தார். அன்று உபவாஸம் இருந்து விதிப்படி பகவானைப் பூஜித்தான். உடனே அவன் நோய் அகன்றது. அளகாபுரி சென்றுன். [குஷ்டரோகத்தை அகற்றும் இது.]

16. சயிநீ

ஆடி சுக்ல ஏகாதசி சயிநீ எனப்படும். மஹாபலியின் கர்வத்தை அடக்க பகவான் வாமன ரூபங் கொண்டா

ரல்லவா? அவர் த்ரிவிக்ரமராய்த் தோன்றி பலியைப் பாதாளத்திற்கு அனுப்பினர். அங்கு பக்தனுன பலியின் முதுகின்மீது தனது சரீரத்தை வைத்தார். மற்ருேர் உடலெடுத்து பாற்கடலில் பன்னக சயனத்தில் படுத்துறங்கினர். கார்த்திகை மாதத்தில் பகவான் எழுந்திருக்கிறார். அந்த நான்கு மாதங்களும் சாதுர்மாஸ்யம் எனப்படும். ஆவணியில் காய்கறிகளேயும் புரட்டாசியில் தயிரையும் ஐப்பசியில் பாலேயும் கார்த்திகையில் பருப்புகளேயும் சாப்பிடலாகாது. [சயிநீ ஏகாதசியன்று தீபதானம் செய்வது சிறந்த தர்மம்.]

17. காமிகா

ஆவணி இருஷ்ண ஏகாதசிக்கு காமிகா என்று பெயர். இவ்வேகாதசி வ்ரதம் செய்வோர் மோக்ஷமடைவர். துளஸீ தளத்தால் பகவானே அர்ச்சிக்க வேண்டும். அதனுல் ஒரு பாரம் ஸ்வர்ணதானம் செய்த பலனேப் பெறலாம். இச்சமயம் நெய் தீபமேற்றுவதும் தீபதானம் செய்வதும் புண்யத்தை அளிக்கத் தக்கன. [இதன் மஹிமையைப் பக்தியுடன் படிப்போர் வைகுண்டம் செல்வர்.]

18. புத்ரதா

ஆவணி சுக்ல ஏகாதசியைப் புத்ரதா என்பர். த்வாபர யுகத்தில் மாஹிஷ்மதீபுரியை மஹீஜித் என்ருேர் அரசன் ஆண்டு வந்தான். அவன் புத்ர பாக்யமின்றி வருந்தினன். பெரியோரை அழைத்தான். "இப்பிறவியில் யாதொரு பாதகத்தையும் செய்யவில்லே. யான் மக்கட் பேறின்றி வருந்தக் காரணம் யாது?" என்று வினவினன். அவர்கள் அரசனே அரண்மனேயிலிருக்கச் சொல்லி அரண்யம் சென்றனர். ஆங்கு லோமசர் எனும் முனிவரைக் கண்டு பணிந்தனர். அவர் ஸாதுக்களே வரவேற்று, "மானிடப் பிறவி பரோபகாரத்திற்காகவே படைக்கப்பட்டது. அதைச்

செய்யாதவன் விலங்கிற்நச் சமமாவான். என்னுல் தங்களுக்கு என்ன உதவி வேண்டும்?'' என்று வினவினுர். வந்தவர் தங்கள் மன்னனுக்கு ஒரு மகன் பிறக்கும் வழியைக் கூறும்படி வேண்டினர். லோமசர் புத்ரதா ஏகாதசி உபவாஸத்தையே அதற்கு உபாயமாகக் கூறினுர். அம்மன்னன் முற்பிறவியில் செய்த பாபத்தையும் ஞானக்கண்ணுலறிந்து உரைத்தாா. "இவ்வரசன் முற்பிறவியில் ஒரு வைச்யனுக இருந்தான். வியாபார நிமித்தம் வெளியூர் சென்றுன. இடைவழியில் தாஹத்தால் வருந்தி ஒரு தடாகத்திற்குச் சென்றுன். அங்கு ஒரு பசு ஜலமருந்திக்கொண்டிருந்தது. அது ஜலத்தைக் கலக்கி விடுமென்று எண்ணி ஓட்டிவிட்டு நீர் குடித்தான். ஆதலால் அவனுக்குப் புத்ரன் பிறக்கவில்லே'' என்றுர். பெரியோர்கள் அரசனிடம் வந்து இதைக் கூறி அவ்வேகாதசி விரதத்தைப் பக்தி சிரத்தையுடன் செய்து வைத்தனர். உடனே அரசனுக்கு ஓர் அற்புதமான ஆண் மகவு பிறந்தது. [புத்ர பாக்யம் உண்டாகும்]

19. அஜா

புரட்டாசி கிருஷ்ண ஏகாதசி அஜா எனப்படும். அதை அனுஷ்டித்தால் முற்பிறவியில் செய்த பாபங்களகலும். அரிச்சந்திர சக்ரவர்த்தி முன்வினேயால் ராஜ்யத்தை இழந்தான். மனேவி மக்களே விற்க நேர்ந்தது. தானும் ஓர் சண்டாளனிடம் அடிமையாக நேர்ந்தது. அச்சமயம் தற்செயலாகக் கௌதம முனிவரைக் கண்டான். அவர் அஜா ஏகாதசியை உபதேசித்தார். அதை விதிப்படி செய்து சக்ரவர்த்தி மனேவி மக்களுடன் ராஜ்யத்தைப் பெற்று ஸுகமாக வாழ்ந்தான்.

20. பத்மநாபா

புரட்டாசி சுக்ல ஏகாதசியைப் பத்மநாபா என்றழைப்பர். ஸூர்ய வம்சத்தில் மாந்தாதா என்றோர் அரசனிருந்

தான். அவன் மநு நீதி தவருது ஆட்சி புரிந்தான். அவன் நாட்டிலே ஒருவகைக் குறையுமில்லை. ஒரு ஸமயம் மூன்ருண்டு அவன் ஊரிலே மழை பொழியா தொழிந்தது. மக்கள் வருந்தினர். குடிகள் கோனிடம் முறையிட்டனர். அவன் தானொரு குற்றமும் செய்யாததால் மழை பெய்யாத வகை யாதென அறியாது விழித்தான். வனம் சென்று ஆங்கிரஸ முனிவரைப் பணிந்தான். மழையுண்டாக வரங் கேட்டான். அவர், "உன் ராஜ்யத்திலே ஒருவன் தன் தர்மத்தை விட்டுப் பிறர் தர்மத்தைக் கைக்கொண்டு தவம் செய்கிறுன். அவனைக் கொன்ருல் மழை பொழியும்" என்ருர். அரசன் அவனைக் கொல்ல மனமில்லாது, முனிவரே! வேறு வழியிருந்தால் கூறும் என்ருன். மஹரிஷி அரசனது கருணையைக் கண்டு மிகக் களித்தார். பத்மா ஏகாதசியைக் கூறினுர். மாந்தாதா அதை அனுஷ்டிக்க, வான் பொழிந்து பூமி செழித்தது.

21. இந்திரா

ஐப்பசி கிருஷ்ண ஏகாதசிக்கு இந்திரா எனப் பெயர். கிருதயுகத்தில் மாஹிஷ்மதிபுரியை இந்த்ரஸேனன் என்ற அரசன் ஆண்டு வந்தான். ஒருநாள் அவன் ஸபைக்கு நாரதர் வந்தார். வேந்தன் விதிப்படி அவரை அர்ச்சித் தான். அவர் தான் யமலோகத்திலிருந்து வருவதாயும், அங்கு நகரத்தில் துன்புறும் இந்த்ரஸேனனது தந்தை இந்திரா ஏகாதசி விரதத்தைச் செய்து தன்னைக் கரையேற் றும்படி புத்ரனிடம் கூறச் சொன்னதாகவும் உரைத்தார். இந்த்ரஸேனன் நாரதர் மூலமாய் அந்த விரதத்தைக் கேட்டு அறிந்தான். விரதம் செய்து தந்தையின் பொருட்டு ஸாளக்ராமத்தினருகே சிரார்த்தம் செய்தான். அதனுல் ஸ்வர்க்கம் சென்ற தந்தை மைந்தனை ஆசீர்வதித்தார்.

22. பாபாங்குசா

ஐப்பிசி சுக்ல ஏகாதசியைப் பாபாங்குசா என்பார்கள். பாபத்தை அகற்ற அது அங்குசம் போன்றது. இதை அநுஷ்டிப்போர் யம யாதனையைக் கண்ணுல் காணமாட்டார். கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களாலும் யாகத்தாலும் தானத்தாலும் எப்பயனுண்டோ அவைகளை இவ்வொரு ஏகாதசியே அளிக்கவல்லது. சாஸ்த்ர முறையை அறியாது ஊராருக்காகவோ அல்லது கபடமாகவோ இதை அநுஷ்டித்தாலும் பலனை அளிக்கும் என்ருல், விதி வழுவாது செய்வோரைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ?

23. ரமா

கார்த்திகை கிருஷ்ண ஏகாதசியை ரமா என்பார்கள். முசுகுந்தன் என்ற அரசனுக்கு சந்த்ரபாகா என்னும் ஓர் அழகிய கன்னிகை இருந்தாள். அவளது தந்தை, சந்த்ரஸேனனது புதல்வனுன சோபனன் என்பவனுக்கு அவளை அளித்தார். ஒரு ஸமயம் சோபனன் மாமனுரில்லத்திற்கு வந்தான். அன்று ஏகாதசி ஆதலின், அரசனது கிங்கரர்கள் வீதிதோறும், ''இன்று ஏகாதசி, எவரும் புஜிக்கலாகாது! உபவாசமிருந்து விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும்!'' என்று பறை சாற்றினர். இதைக் கேட்ட சோபனன், ஐயோ! யான் மிக்க துற்பலமானவன்! ஒரு நாள் உணவில்லாதிருப்பதெப்படி? என்று வருந்திஞன். அவன் மனைவியும், ஐயனே! என் தந்தை எக்குற்றத்தையும் மன்னிப்பர்! எவராயினும் ஏகாதசியன்று புஜித்தால் அவரைக் கடுமையாக சிக்ஷிப்பாரே! யான் என் செய்வேன்! என வருந்திஞள். முடிவில் அவன் உபவாஸமிருந்தான். பசியால் இரவெல்லாம் வருந்திக் காலையில் சோபனன் இறந்தான்! விதிப்படி அவனது சவத்தைத் தீயிலிட்டனர்! சந்த்ரபாகை கணவனையே நினைத்து வருந்திஞள்.

சில நாட் சென்றபின் தீர்த்த யாத்திரைக்குச் சென்ற ஸோமசர்மா என்ற பெரியார் சந்த்ரபாகையினிடம் வந்தார். பெண்ணே! உனது கணவன் மந்த்ரமலைச் சாரலிலே ஓர் திவ்ய நகரத்தை ஆண்டு வருகிறான்! என்றார். அதைக் கேட்ட சந்த்ரபாகை தந்தையுடன் மந்த்ர மலைக்குச் சென்றாள். வாமதேவ முனிவரது ஆச்ரமத்தருகே தன் பதி ராஜ்யபாரம் செய்யக் கண்டாள். அவ்வரசனும் தன் மனைவியைக் கண்டு களித்து யான் ச்ரத்தையில்லாமல் ரமா ஏகாதசியை அநுஷ்டித்தேன்! ஆதலால் இவ்வுத்தம நகரம் கிட்டியது! இது விரைவில் அழிந்து விடும்! இதற்கு என் செய்வதென வினவினான்? அவள் தான் செய்துவந்த ஏகாதசி புண்யத்தை அளித்தாள்! நகரம் சாச்வதமாயிற்று. இருவரும் இன்பமாகக் கூடி ரமித்தனர்.

24. ப்ரபோதினீ

கார்த்திகை சுக்ல ஏகாதசிக்கு ப்ரபோதினீ என்று பெயர். பகவான் நித்ரையைவிட்டு எழுந்திருப்பதால் அதற்கு அந்தப் பெயர் தோன்றிற்று. ஸகல புஷ்பங்களாலும் மாதவனை அர்ச்சித்து எல்லாக் கனிகளையும் நிவேதனம் செய்ய வேண்டும். துளஸியால் பகவானைப் பூஜிப்பவர் வைகுண்டம் செல்வர். துளஸியைத் தர்சிப்பது, தொடுவது, பெயரைச் சொல்வது, துதிப்பது, துளஸியை வைத்து வளர்ப்பது, ஜலம் விடுவது, பூஜிப்பது என்று ஒன்பது வகையான துளஸீ பக்தியைச் செய்வோர், கோடி யுகம் விஷ்ணுலோகத்தில் வஸிப்பர்.

25. கமலா

அதிகமாக வரும் ஏகாதசிக்குக் கமலா என்று பெயர். அதிக மாதத்திற்குப் புருஷோத்தம மாதம் என்று பெய

ருண்டு. அவந்தி தேசத்தில் சிவசர்மா என்று ஓர் அந்தண னிருந்தான். அவனுக்கு ஐந்து புதல்வர்களுண்டு. அதில் கடைசி குமாரன் ஜயசர்மா என்பவன். அவன் மிக்க பாபி. அவனைப் பெற்றோர் வீட்டை விட்டுத் துரத்தி விட்டனர். அவன் ஹரிமித்ரர் என்னும் மஹரிஷியின் ஆச்ரமம் சென்றான். ஆங்கு கமலா ஏகாதசியின் பெருமை முனிவ ரால் கூறப்பட்டது. இவனும் அதை விதிப்படி அநுஷ் டித்தான். அன்றிரவு லக்ஷ்மீ தேவீ அவனெதிரில் தோன்றி னாள். ஜயசர்மா தேவியை வணங்கி எப் புண்யத்தால் தனக்கு அவள் தர்சனம் தந்தாள் என வினவினான். கமலா ஏகாதசியை நீ அனுஷ்டித்தாய்! ஆதலால் உனக்கு அபரி மிதமான செல்வமுண்டாகுமெனக் கூறி மறைந்தாள்.

ஏகாதசி அனுஷ்டிக்க வேண்டிய முறை

தசமியிலும் திவாதசியிலும் ஒரே வேளைதான் புஜிக்க வேண்டும். ஏகாதசியன்று அதிகாலையில் எழுந்து ப்ராத ஸ்நானம் செய்ய வேண்டும். நித்ய கர்மங்களை விதிப்படி அநுஷ்டிக்க வேண்டும். ஏகாதசியன்று துளஸீ தளம் பறிக்கலாகாது. ஆதலால் முதல் நாளே பூஜிப்பதற்கு அதை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். மஹா விஷ்ணுவுக்கு வேத விதிப்படி பூஜை செய்ய வேண்டும். அன்று சக்தியிருப்பின் நிர்ஜலமாக இருப்பது உத்தமம். பழங்களை நிவேதனம் செய்து புஜிப்பது மத்யமம். பற் றில்லாத பலஹாரங்களை ஒரு வேளை புஜிப்பது அதமம். ஒரு வேளை அரிசியை வறுத்து அன்னமாக உட்கொண்டு இரவு உபவாஸமிருப்பது அதமாதமம். சக்தியில்லாவர் கடைசி வழியைப் பின்பற்றலாம். அன்று எவருக்கும் அன்னதானம் செய்யக்கூடாது. பகலில் தூங்கலாகாது. இரவில் பகவத் பஜனை அல்லது புண்ய கதாச்ரவணம்

முதலியவைகளால் கண்விழிக்க வேண்டும். கோபம், பரநிந்தை, க்ரூரமான வார்த்தை, கலஹம், தாம்பூலம், சந்தனம், மாலே, கண்ணுடி பார்த்தல், ஸ்த்ரீ ஸங்கம் முதலியவைகளே விடவேண்டும். ஸதா அவர் திருநாமத்தை உச்சரிக்க வேண்டும். த்வாதசியன்று காலேக்கடனே முடித்து பகவத் பூஜை செய்யவேண்டும். ஓர் அதிதிக்கு அன்ன மளித்து நாம் புஜிக்க வேண்டும். அன்று அகத்திக்கீரை, நெல்லிக்காய், சுண்டைக்காய் இவைகளே அவசியம் புஜிக்க வேண்டும். இங்ஙனம் ஓர் பக்ஷத்திற்கோர்முறை ஏகாதசி உபவாஸமிருந்தால் தேகாரோக்யம் உண்டாகும். பாபமக லும். ஸந்ததி, செல்வம் பெருகும். ஸ்வர்க்கம் கிட்டும். மனம் நிர்மலமாகும். ஞானம் சுரக்கும். மோக்ஷாநந்தம் பெறுவர்.

சுபம்

பாத்ம புராணத்தையொட்டி இங்கு கூறப்பட்ட ஏகாதசிகளின் பெயரைத் தவிர சில புதிய பெயருள்ள ஏகாதசிகள் பஞ்சாங்கத்தில் காணப்படுகின்றன. இங்குள்ள வற்றிற்கே வேறு பெயர்கள் அவை. உதாரணமாக, சில வற்றைக் காட்டுவோம். புத்ரதா என்பது பரிபார்த்தனே காதசி என்றும், பாபாங்குசா என்பது வ்யுத்தாநமென்றும், ப்ரபோதிநீ என்பது கைசிக என்றும், புத்ரதா என்பது பீஷ்மைகாதசி என்றும், கூறப்படுகிறது. ஏகாதசி விரதம் பிரதானமானல் அதற்கு த்வாதசி அங்கமாகும். த்வாதசி முக்கியமானல் ஏகாதசி அதன் அங்கமாகும். ஏகாதசி என்ற சப்தம் காதில் விழுந்தவுடன் ருக்மாங்கதன் நினைவுக்கு வருவது ஸஹஜம். ஆதலின் விஸ்தாரமாக நாரதத்தில் உள்ளதை மிகமிகச் சுருக்கமாகவும் கைசிக புராணம், அம்பரீஷன் சரிதம் இவைகளேயும் சேர்த்தோம்.

கைசிக புராணம்

[பூமிக்கு வராஹரூபமான விஷ்ணு கூறுகிருர்—
வராஹ புராணம்]

தென்னுட்டில் மஹேந்த்ர மலேக்கருகே க்ஷீரநதி ஒன்று இருக்கிறது. அங்குள்ள ஸித்தாச்ரமம் என்ற சந்நதிக்கு வெகுதூரத்தில் நின்று ஒரு சண்டாளன் எனது குணங்களேப் பாடிக் கண் விழிப்பான். கார்த்திகை மாத சுக்ல பக்ஷ ஏகாதசியன்று ஊர்ச்சந்தடி அடங்கினபின் இரவில் பாட வந்தான். அச்சமயம் அங்கு ஓர் பிரும்மரக்ஷஸ் அவனே விழுங்க வந்தது. அச்சண்டாளன் தான் பகவானது ஸந்நதியில் பாடி விட்டு வருவதாகவும், தன்னைப் பின்னர் பக்ஷிக்கலாமென்றும் கூறினுன். அது எப்படி உன்னே நம்புவது? என்று கேட்க, யான் உன்னிடம் வராவிடில் இந்த இந்தப் பாபங்களேச் செய்த பலனே அநுபவிப்பேன் என்ருன். இதைக் கேட்ட பிரும்ம ரக்ஷஸ் அவனே விட்டுவிட, அவன் வழக்கப்படி பகவானது ஆலயத்திற்கு வெகுதூரே நின்று கைசிக ராகத்தில் பகவத் குணங்களேப் பாடினுன். காலேயில் சொன்னவண்ணம் பிரும்மரக்ஷஸிடம் போகும் போது வழி மறித்து ஒருவன், அங்கு செல்லாதே! பிரும்மரக்ஷஸ் உன்னே புசிக்கும் என்ருன்! எனினும், சொன்ன சொல்லே நிறை வேற்ற அதனிடம் சென்று தன்னே உண்ணும்படி வேண்டினுன்! அது, உனது ஒரு யாமம் கானம் செய்த புண்யத்தையாவது கொடு! என்று அதனுல் நற்கதி பெற்றது. அன்றியும் அது ஸோமசர்மா என்னும் பிராம்மணுக இருந்து சாஸ்திர முறை தவறி ஓர் யாகம் செய்ய, அதுவும் பூர்த்தியாமல் இறந்ததால் இப் பாபஜன்மா கிட்டியதென்றும், உன்னுல் உயர் பதவியைப் பெற்றேனென்றும் கூறிச் சண்டாளனேப் போற்றி ஸ்வர்க்கம் சென்றது. இவனும் நற்கதி பெற்ருன்.

———

ருக்மாங்கதன் சரிதம்

[நாரதபுராணம் உத்தரபாகம்—எண்பத்திரண்டு
அத்தியாயங்களால் விஸ்தாரமாக
வர்ணிக்கப்பட்டிருக்கிறது.]

ருக்மாங்கதன் அநுஷ்டித்த த்வாதசி (ஏகாதசியுள்பட விரதத்தால் யமன் வேலையில்லாது பிரும்மாவிடஞ் சென்று முறையிட்டார். அவர் மோஹினியைப் படைத்தனுப்ப, வேட்டையாட வனம் வந்த வேந்தனை அவள் மயக்கினுள். அரசன் அவளை மணந்து தன் புத்ரன் தர்மாங்கதனை, அவளைத் தாய் போல் கருதச் சொன்னுன். அவனும் தனது சொந்தத் தாயைவிடப் பன்மடங்கு அன்புடன் அவளுக்கு உபசாரம் செய்து வந்தான்.

ருக்மாங்கதன் அவள் விரும்பியவண்ணம் ராஜ்யத்தைப் புத்ரனிடம் அளித்து மோஹினியுடன் ஸதா ரமித்துக் கொண்டிருந்தான். ஓர் ஏகாதசியன்று அந்த விரதத்திற்குப் பங்கத்தை உண்டு பண்ண தன்னுடன் உணவுண்டு ரமிக்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்தாள். அரசன் அதைத்தவிர எது வேண்டுமானுலும் தருவதாக ஸமாதாநம் செய்தான். ருக்மாங்கதனும் அவன் தாயும் வேண்டினர். முடிவில் அவள் தர்மாங்கதன் தலையைக் கேட்க அதை அரசனளிக்க, புத்ரன் சிரஸை வெட்டும் போது பகவான் ப்ரத்யக்ஷமாகி அதைத் தடுத்தார். அவளிடம் கோபம் கொண்ட வஸு கணங்கள் அவளைச் சபிக்க அவள் சங்கதீர்த்த யாத்திரை யால் தன் பாபத்தை அகற்றிக் கொண்டாள்.

அம்பரீஷன் சரிதம்

(ஸ்ரீபாகவதம், மஹாபாரதம் - இவைகளைவிட ஸ்ரீஸ்காந்தம் கார்த்திகை மஹாத்மியத்தை விசேஷமாகக் கூறுகிறது)

அம்பரீஷ மஹாராஜன் கார்த்திகை ஏகாதசி உபவாஸ மிருந்து மறுநாள் த்வாதசி மிக ஸ்வல்ப காலமே இருக்க அதற்குள் நித்ய கர்மாக்களை முடித்துப் பாரணை செய்யச் சென்றான். அங்கு திடீரென்று வந்த துர்வாஸர் தனக்கு அன்னமளிக்கும்படி யாசித்தார். அரசன் த்வாதசி சிறிது நேரமே இருப்பதால் விரைவில் வரும்படி அவரை வேண்டினான். அவர் வராமல் தாமதிக்கவே மற்ற பிராம்மணர்களிடம் யாது செய்வது-என்றுகேட்டான். அவர்கள் பாரணை செய்யாதிருப்பதும் தவறு; அவரை விட்டுச் செய்வதும் தவறு. உன் மனசாக்ஷிபின்படி நட என்றனர்.

மன்னன் தீர்த்தம் அருந்தினால் பாரணை செய்தது போலும், செய்யாதது போலுமாகும் என எண்ணி ஜலம் அருந்தினான். உடனே எதிரில் தோன்றிய முனிவர் சினங் கொண்டு மீனாகவும், ஆமையாகவும், பன்றியாகவும், நரசிம்மம் முதலியவைகளாகவும் பத்து பிறவி எடுக்கும்படி அரசனைச் சபித்தார். மறுபடியும் கோபமடங்காமல் சாபங் கொடுக்க ஆரம்பித்தவுடன் பகவான் ஸுதர்சனத்தைவிட அது முனிவரை விரட்டிற்று. வைகுண்டஞ் சென்று பகவானை வேண்ட, ஆயிரம் பிராம்மணனுக்குச் சமமான அம்பரீஷனுக்கு நீர் கொடுத்த சாபத்தை அவன் உள்ளத்திலிருந்த நான் ஏற்றேன். தசாவதாரம் செய்கிறேன், உம் சொல்லை நிறைவேற்ற. ஆனால் நீர் அவ்வரசனையே சரணாகதி அடையும் என, அங்ஙனமே அவர் மன்னனால் சுகமுற்றார்.

ஒவ்வொரு ஏகாதசியிலும்,விசேஷமாக வைகுண்ட ஏகாதசியிலும் கதைகளைப் படித்தாலும் படிக்கக் கேட்டாலும் கோதானம் செய்த பலனுண்டாகும்.

முற்றிற்று.